

புத்தகம் பற்றிய
புத்தகம்
a Book about Book
ஜெ. வீரநாதன்
M.A., PGDJMC., M.Phil.,
ESSENTIAL PUBLICATIONS
புத்தகங்கள் பற்றி அறிஞர்கள் கூறியுள்ள கருத்துக்கள் அடங்கிய சிறிய புத்தகம் ஒன்றினை இந்தப் புத்தகத்துடன் இணைப்பாகப் பெற்றுக் கொள்ளவும்!




புத்தகம் பற்றிய புத்தகம் என்ற நூலிற்குள் என்ன உள்ளது என்பதை அறிந்த கொள்ளவே இந்தத் துவக்கப்பக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. புத்தகத்தில் இவற்றைத் தொடர்ந்து முதன் பக்கங்கள் தரப்பட்டுள்ளன. மொத்தம் 322 பக்கங்களில் புத்தகம் தொடர்பான (பொருளடக்கத்தில் சொல்லியுள்ள தலைப்புகளில்) தகவல்கள் தரப்பட்டுள்ளன.


மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

***balajiicg@yahoo.com***

***veeranathan@yahoo.com***

***essential.publications.com***

**Cell : 98422-13782**



புத்தகம் பற்றிய



# புத்தகம்

## a Book about Book


**ஜெ. வீரநாதன்**

**M.A., PGDJMC., M.Phil., (M.A.,)**

eMail : veeranathan@yahoo.com



ESSENTIAL PUBLICATIONS Estd. 1975

**எஸென்ஷியல் பப்ளிகேஷன்ஸ்**

167ஏ, போலீஸ் கந்தசாமி வீதி, கணேசபுரம், ஒலம்பஸ், இராமநாதபுரம்

கோயம்புத்தூர் - 641 045, இந்தியா - Coimbatore - 641 045, India

தொலைபேசி : 0422-2323228, செல்பேசி : 98422-13782, 99444-13782

மின்னஞ்சல் : essential.publications@yahoo.com, வலைதளம் : www.veeranathan.com

## நூல் விவரப் பட்டியல்

**ISBN : 978-93-80324-30-2**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **புத்தகம் பற்றிய புத்தகம்**<br>**A Book about the Book** |
| ஆசிரியர் | : | ஜெ. வீரநாதன் |
| நூல்வகை | : | புத்தகம் தொடர்பான பல்வேறு தகவல்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன |
| உரிமை | : | © ஆசிரியருக்கு |
| முதல் பதிப்பு | : | **ஏப்ரல் 23, 2013 (உலகப் புத்தக தினம்)** |
| தாள் | : | 70 ஜிஎஸ்எம் மேப்லித்தோ |
| அச்செழுத்து | : | 12 புள்ளிகள் |
| பைண்டிங் | : | கெட்டி அட்டைக் கட்டு (Hard bound) |
| பக்கங்கள் | : | 352 (30 + 322) |
| விலை | : | **ரூ. 275/-** |
| வடிவமைப்பு, ஒளியச்சு | : | **சித்ராலயா,** கோயம்புத்தூர் - 641 045<br>போன் : 0422-2323228 |
| அச்சிட்டோர் | : | **மாஸ் டைபோகிராபிக்ஸ்**<br>சென்னை - 600 037 |
| வெளியீடு | : | **எஸென்ஷியல் பப்ளிகேஷன்ஸ்**<br>167ஏ, போலீஸ் கந்தசாமி வீதி, ஒலம்பஸ்<br>இராமநாதபுரம், கோயம்புத்தூர் - 641 045<br>போன் : 0422-2323228, 98422-13782<br>மின்னஞ்சல் : balaji**icg**@yahoo.com<br>வலைதளம் : www.veeranathan.com |



Copyright warning : No part of this publication may be reproduced or transmitted in a retrieval system in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or otherwise, without the prior written permission of Essential Publications, Coimbatore. The information in this book is furnished for informational use only, is subject to change without notice, and should not be constructed as a commitment by the Author and/or the publisher of this book. The publisher assumes no responsibility for any errors or inaccuracies that may appear in this book. Products names mentioned in this book are used for identification purposes only and may be trademarks of their respective companies. Coimbatore Jurisdiction.

தகவல்களைத் தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மட்டுமே இந்தப் புத்தகம் வெளியிடப்படுகிறது. மேலும் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி மாறுதலுக்கு உட்பட்டவை மட்டுமல்லாது. இந்தப் புத்தகத்தில் கொடுத்துள்ள தகவல்கள் மற்றும் செய்திகள் உள்ளிட்ட அனைத்திலுமான தவறுகள், பிழைகள், துல்லியமின்மை உள்ளிட்டவற்றிற்கும், இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை பயன்படுத்துவதால் எதிர்பாராமல் ஏற்படும் தவறுகளுக்கும், இழப்புகளுக்கும், சேதத்திற்கும் இந்த நூலின் ஆசிரியரும் பதிப்பகத்தாரும் எந்த வகையிலும் பொறுப்பு ஏற்க முடியாது என்ற வகையிலும் இந்த நூல் வெளியிடப்படுகிறது. கோயம்புத்தூர் நகர சட்ட எல்லைக்குட்பட்டது.



கவிப்பேருவி
ஈரோடு
தமிழன்பன்

# மலர்களைப் பற்றியொரு மலர் பேசுகிறது!

கணினிக் கம்பன்
வீரநாதனின் புத்கம் பற்றிய புத்தகம்,
மலர்களைப் பற்றியொரு மலர்
பேசுவது போல்
மணங்களின் சங்கமம், கருத்துக் கதம்பம்.

படைப்பவர், படிப்பவர் -
இவர்களிடையே பாலம் போடும்
பதிப்பவர்,
வெருக்கும் ஒளியின் உதவி, எளிதாகக்
கிடைக்கிறது இந்நூலில்.

'இணையம் அறிவோம்' என்றெழுதிய
வீரநாதன்
இவையும் அறிவோம் என்று
ஆயிரம் தகவல்களை அள்ளித் தருகிறான்.

கற்காலம் முதல் காகிதக் காலம்வரை
எழுத்து முயற்சிகள்
பழுத்து வந்ததைக் காட்டும் - இந்நூல்
மின்னூல் முதல் பன்னூல் பணிகளையும்
படிப்பவர்களுக்குப் பசியாறலாகப்
பரிமாறுகிறது.

சுருக்கமாய் இதுவென்று
சொல்லும்படியாக -
வீரநாதனே விரிந்த நூலொன்றை
வித்தியெடுக்க வேண்டும் என்பது
நமது ஆவல்.

மனப்பாடம் செய்யவும்
மதிப்பெண் பெறவுமே எழுதப்படுவதில்லை
புத்தகம்.
மனத்திற்குப் பாடமாகவும்
மதிப்புறு எண்ணங்களின் இடமாகவும்
இருப்பதல்லவா புத்தகம்!

புத்தகம் பற்றிய
சிந்தனைக் கோவையை
வீரநாதன் தொகுத்துக் கொடுத்ததும்
போற்றத்தக்கது!

மீண்டும் சொல்வோம்,
முத்தங்கள் பற்றியொரு முத்தம்
பேசுவதுபோல்,
புத்தகங்கள் பற்றிப் பேசுமிப் புத்தகம்
அறிவு யுத்தத்திற்கும்
ஆயுத சாலைகளை அடையாளம்
காட்டும்.



# வாழ்த்துரை



**சி.டி. குமாரவேல்**
துணைத் தலைவர்
ஆல் இந்தியா ஃபெடரேஷன் ஆஃப்
மாஸ்டர் பிரிண்டர்ஸ், புதுதில்லி
தலைவர்
கோயம்புத்தூர் மாஸ்டர் பிரிண்டர்ஸ் அசோசியேஷன்
தமிழ் நாடு மாஸ்டர் பிரிண்டர்ஸ் ஃபெடரேஷன்

**புத்தகம் பற்றிய புத்தகம்** படித்தேன். வியந்தேன். இவ்வளவு தகவல்களா? மலைத்தேன்.

ஒரு கதை அல்லது நாவல் அல்லது தொழில் சார்ந்த புத்தகங்கள் எழுதுவதுகூட எளிது. நாம் சந்தித்த அல்லது நமது அனுபவங்களை வைத்து எழுதி விடலாம்.

ஆனால் அரிய தகவல்களை திரட்டி, அதை ஒரு அற்புத மாலையாகத் தொடுத்து, அது பார்க்க மட்டுமல்ல எளிமையாக படிக்கவும் அழகாக வழங்கி இருப்பது நண்பர் திரு. ஜெ. வீரநாதனால் மட்டும்தான் முடியும் என்கிற அளவுக்கு சாதனையாகத் திகழ்கிறது. அவரது பல ஆண்டுகால தேடல்கள், முயற்சிகள், தகவல்கள் இதில் இடம் பெற்று உள்ளன.

புத்தகங்கள் பற்றிய அருமையான தகவல்களுக்கு எங்கும் சென்று தேட வேண்டியது இல்லை. இந்த ஒரு புத்தகத்தை புரட்டினாலே போதும். அத்தனையும் அரிய பொக்கிஷங்கள்.

புதிதாக எழுதும் எழுத்தாளர்களுக்கும் இந்த நூல் பல அரிய தகவல்களை வழங்குகிறது. உதாரணமாக பொது நூலக துறைக்கு விண்ணப்பிப்பது எப்படி? அதற்கான விண்ணப்ப படிவத்தின் மாதிரியை கூட கொடுத்து இருப்பது மற்றவர்களும் பயன் பெற வேண்டும் என்ற உன்னத நோக்கமேயாகும்.

இதே போன்று புத்தக காப்புரிமை பதிப்பாளர்களின் கடமைகளையும் சுட்டிகாட்டி இருப்பதுடன் அவர்களின் இடர்பாடுகளையும் எடுத்துக்கூறத் தவறவில்லை.

எழுத்தாளர்கள் கம்ப்யூட்டரை பயன்படுத்தும்போது என்ன செய்ய வேண்டும், புத்தகம் வெளியிடப்பட்டவுடன் என்னென்ன செய்ய வேண்டும் என்று பல ‘டிப்ஸ்’களை வழங்கி இருப்பது சிறப்பு.

நண்பர் வீரநாதன் எழுதிய பல புத்தகங்களுக்கு நான் வாழ்த்துரை எழுதி இருக்கிறேன். அவை எல்லாம் பெரும்பாலும் தொழில் நுட்ப புத்தகங்கள்.

ஆனால் புத்தகம் பற்றிய புத்தகத்துக்கு வாழ்த்துரை வழங்குவதை மிகவும் பெருமையாகக் கருதுகிறேன். அவ்வளவு அருமையான புத்தகம் இது. வீரநாதன் பார்த்து பார்த்து செதுக்கிய அழகிய சிலை போன்ற புத்தகம் இது.

பல பரிசுகளை பெற மிகுந்த தகுதியான புத்தகம். அவரது இத்தகைய சாதனைகள் தொடர வாழ்த்துக்கள். பாராட்டுதல்கள்.

இப்படிக்கு,

*11.09.2012*

**சி.டி. குமாரவேல்**
**சரவணா ஆப்செட் பிரஸ்**
4, பாரதியார் சாலை, பாப்பநாயக்கன்பாளையம்
கோயம்புத்தூர் - 641 037

# வாழ்த்துரை



**த. ஸ்டாலின் குணசேகரன்**
**மக்கள் சிந்தனைப் பேரவை**
ஈரோடு

"**புத்தகம் என்ற தலைப்பிலேயே ஒரு புத்தகம்**" வெளிவருவதும் அப்புத்தகம் புத்தகத்தயாரிப்பிலிருந்து தொடங்கி வாசிப்பை வலியுறுத்தும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாகத் திகழ்வதும் எமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கும் நற்செய்தியாகும்.

இது புத்தக வணிகர்கள் முதல் வாசகர்கள் வரை வைத்திருக்க வேண்டிய கையேடாக விளங்குகிறது. புத்தகம் சார்ந்த ஏராளமான தகவல்களை தாராளமாகத் தந்திருக்கிறது இந்நூல்.

கோவையைச் சேர்ந்த திரு ஜெ.வீரநாதன் தன்னுடைய புத்தக வெளியீட்டகமான "**எஸென்ஷியல் பப்ளிகேஷன்ஸ்**" மூலம் இந்நூலை வெளியிட்டுள்ளார். திரு ஜெ.வீரநாதனின் புத்தகம் குறித்து ஒரு புத்தகம் எழுத வேண்டுமென்ற சிந்தனையை மனதில் பதியமிட்டு வளர்த்ததாகவும் ஒரு கட்டத்தில் அதற்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் இந்நூலை எழுதி, வெளியிடுவதாகவும் அவரே முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

புத்தகப் பதிப்பு குறித்து அறிந்துகொள்ள வேண்டிய பல தகவல்களைத் தாங்கி இந்நூல் வெளிவந்துள்ளது. புத்தக அச்சின் வரலாற்றிலிருந்து தொடங்கி தற்போது சிறப்பாக நடைபெற்று வருகிற புத்தகச் சந்தைகள் வரை அலசியிருப்பது வாசகர்களுக்கு புத்தகங்கள் குறித்து ஒரு முழுப்பார்வையைக் கொடுக்கும் நல்ல முயற்சியாகும்.

ஒரு புத்தகம் எவ்வாறு உருவாகிறது என்பதை ஒரு கட்டுரை வடிவில் இந்நூலில் எழுதப்பட்டிருப்பதோடு அதனை பார்த்தவுடன் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் படம் போட்டும் விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

ஒரு புத்தகத்தை எழுதிவிட்டு அது எவ்வாறு பதிப்பிப்பது அல்லது பதிப்பகத்தை எப்படி அணுகுவது என்று தனக்குள் ஆயிரம் கேள்விகளைக் கேட்டுக் கொள்ளும் படைப்பாளிகளுக்கு இந்நூலில் பதில் இருக்கிறது.

பொதுவாக புத்தக வாசிப்பு குறைந்து வருகிறது என்றும் குறிப்பாக இளைஞர்கள் தொலைக்காட்சி, திரைப்படம், கணிணி முன்பு தவங்கிடக்கின்றனர் என்றும் கருத்து நிலவுகிற இக்காலகட்டத்தில் புத்தக வாசிப்பை ஊக்கப்படுத்த இந்நூல் உறுதுணையாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

புத்தகவாசிப்பு ஒரு மக்கள் இயக்கமாகவே உருவெடுக்க வேண்டும் என்று **மக்கள் சிந்தனைப் பேரவை** எதிர்பார்க்கிறது. அத்திசை நோக்கி சமூகம் இட்டுச் செல்லப்படவேண்டும் என்ற நோக்கில்தான் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதத்தில் தேசிய அளவிலான புத்தகத்திருவிழாவை பேரவை சிறப்பாக ஈரோடு மாநகரில் நடத்தி வருகிறது.

நூலாசிரியர் இனிய நண்பர் ஜெ. வீரநாதனின் சீரிய முயற்சி சிறப்பாகப் பாராட்டப்பட வேண்டியதாகும். அரிதின் முயன்று சிரத்தையெடுத்து பல தகவல்களையும் விபரங்களையும் திரட்டியுள்ளார் நூலாசிரியர்.

புத்தகம் குறித்து இப்புத்தகம் வாசிக்கப்படவேண்டும். இந்நூல் வாசிக்கப்பட்டால் பிற நூல்கள் வாசிக்க இதுவே தூண்டு கோலாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

நூலாசிரியர் ஜெ.வீரநாதனின் வித்தியாசமான முயற்சிக்கு பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு இத்தகைய சமூக மேம்பாட்டிற்கான இவரின் பணிகள் மேலும் தொடர வாழ்த்துகளையும் தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.

இப்படிக்கு,

*தேதி : 10.10.2012* **த. ஸ்டாலின்குணசேகரன்**

*இடம் : ஈரோடு* *தலைவர்*

***மக்கள் சிந்தனைப் பேரவை***

# மதிப்புரை



***ச. மணிவண்ணன்***
*மணிபாரதி அச்சகம்*
*சிதம்பரம்*

புத்தகம் பற்றிய ஒரு புத்தகம் நானறிந்த வகையில் இவ்வளவு விரிவாகத் தமிழில் வெளிவந்ததில்லை. நூல்கள் தோன்றிய விதம், அதன் வரலாறு, வடிவங்கள், தற்போதுள்ள நிலை, மின்னூல்கள், தமிழகத்திலுள்ள குறிப்பிடத்தகுந்த ஆய்வு நூலகங்கள், மாத, வார இதழ்கள், பதிப்பு குறித்த கூட்டங்கள், ஒப்பந்தம் செய்து கொள்ளும் முறை, பதிப்பாளர்கள் குறித்த பெருமிதம், பதிப்பாளர்கள் சந்திக்கும் பிரச்சனைகள், கண்காட்சிகள், உலக, இந்திய, தமிழக அளவில் நூல்களுக்கு வழங்கப்படும் விருதுகள், ஐஎஸ்பிஎண் குறித்த விளக்கங்கள், பெறும் முறை, மாறுபட்ட வடிவங்களிலும் அளவுகளிலும் உள்ள நூல்கள் பற்றிய விபரம் என விரிவாக ஆச்சரியப்படத்தக்க வகையில் பரிமாறிக் கொள்கிறது இந்நூல்.

ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவந்துள்ள சிறப்பு வாய்ந்த நூல்களை வாசகர் படிப்பதற்காக ஒவ்வொரு தலைப்பிற்கு மேலும் பரிந்துரையாக வழங்கியிருப்பது மற்றுமொரு குறிப்பிடத்தக்க சிறப்பு. ஆசிரியர் தன்னடக்கத்துடன் குறிப்பிட்டுள்ளது போல இது ஓர் அறிமுகம்தான். படிக்கப் பரிந்துரைக்கத் தக்க நூல்கள் இன்னும் ஏராளம், ஏராளம் உள்ளன.

நூல்களின் வரலாறு என்பது எழுத்து பிறப்பதற்கு முன் மனிதன் காட்டு மனிதர்களாக குகைகளில் வாழ்ந்த காலத்திலிருந்து துவங்குகிறது. குகை ஓவியங்களே ஆரம்பகால புத்தகங்கள். மனிதன் தன் வாழ்வை, அனுபவங்களை, இருப்பை பதிவு செய்ய முயன்றதே புத்தகங்களின் வரலாற்றுத் துவக்கம். எனவே உணவு, உடை, இருப்பிடம் போல மனிதனின்

அடிப்படைத் தேவைகளில் ஒன்று நூல்கள் என அழகாக நிறுவியிருக்கிறார் நூலாசிரியர்.

நூல்களின் நவீன கால வரலாறு என்பது அச்சுக்கருவியின் கண்டுபிடிப்பிலிருந்து துவங்குகிறது. உலகின் முதல் தகவல் தொடர்புச் சாதனம் அச்சுக் கருவியே. அச்சுக்கருவி கண்டு பிடிக்கப்பட்ட பின் முதலில் வெளியிடப்பட்டவை நூல்களே. சரியாகச் சொல்லப்போனால் நூல்களை அச்சிடுவதற்காகவே முதன் முதலில் அச்சுக்கருவி கண்டுபிடிக்கப்பட்டது. அச்சுக் கருவியின் பிற பயன்பாடுகள் பின்னாளில் வந்தவையே. மன்னர்களிடத்திலும், பெரும் பிரபுக்களிடத்தும், குறிப்பிடத் தகுந்த அறிவுத் துறையினரிடமும் மட்டுமே இருந்த நூல்கள் அச்சுக் கருவியின் கண்டுபிடிப்புக்குப் பின் மக்கள் மயமாகத் தொடங்கியது. அச்சுக் கருவியின் வருகைக்குப் பின் ஏராளமான தகவல் தொடர்புக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. எனினும் அச்சுக் கருவி ஏற்படுத்திய முற்போக்கான, புரட்சிகரமான சமூக, அரசியல், மாற்றங்களை வேறெந்தத் தகவல் தொடர்பு சாதனங்களும் ஏற்படுத்தவில்லை.

ஐரோப்பாவில் ஏற்பட்ட ஜனநாயகப் புரட்சிகள், குறிப்பாக பிரெஞ்சுப்புரட்சி, தாம் ஒரு மொழி சார்ந்த தேசிய இனத்தவர் என்ற உணர்வு மக்களிடையே பரவலாக ஏற்படுதல், இதையடுத்து பல நாடுகளாகச் சிதறிக் கிடந்த ஜெர்மனியும், இத்தாலியும் ஒன்றிணைந்து முழு தேசங்களானது, பல நாடு களில் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்கள் போன்றவற்றில் அச்சுக் கருவிக்கும், அதன் மூலம் மக்கள் மயமான புத்தகங்களுக்கும் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. பிரெஞ்சுப் புரட்சியில் பயன்படுத்தப்பட்ட கில்லட்டின் இயந்திரமே மாற்றங்களுக்கு உட்பட்டு இன்று அச்ச கங்களில் பயன்படுத்தப்படும் வெட்டும் இயந்திரம் ஆகும். வெட்டு இயந்திரத்திற்கும் கில்லட்டின் என்பதே பெயராகும். சமூகப் புரட்சிகளுக்கும் அச்சுத் துறைக்கும் உள்ள பிரிக்க முடியாத உறவிற்கு இது மற்றுமொரு சான்றாகும்.

தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் போல பீகார் மாநிலம், பாட்னாவில் குதாபக்ஷ் ஓரியண்டல் நூலகம் அமைந்துள்ளது.

மொகலாய மன்னர்களிடம் பணியாற்றிய குதாபக்ஷ் நூல்களின் மீது பெரு விருப்பம் கொண்டவராயிருந்தார். அவர் சேகரித்து வைத்திருந்த பல நூறு கையால் எழுதி, அழகாக ஓவியங்கள் வரையப்பட்டு பைண்டிங் செய்யப்பட்ட நூல்கள் அந்நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. சாத்தியமானவை அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. பிற பல நூல்களும் சேகரிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அமைந்துள்ள குகை ஓவியங்கள் குறித்தும் நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். திண்டிவனத்திலிருந்து மரக்காணம் செல்லும் சாலையில் பெருமுக்கல் என்கிற கிராமம் அமைந்துள்ளது. அங்குள்ள குன்றின் மேல் இராஜாதித்யன் என்கிற சோழ இளவரசனால் கட்டப்பட்ட கோவில் ஒன்று உள்ளது. அந்தக் குன்றின் பக்கவாட்டில் வற்றாத நீரூற்று ஒன்றும், ஆதி மனிதர்கள் வாழ்ந்த குகை ஒன்றும் அமைந்துள்ளது. அக்குகையின் பாறைச் சுவர்களில் கீறல்களாக மனித ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. பாறையின் தரைப்பகுதி பல நூறு ஆண்டுகள் பயன்படுத்தப்பட்டதன் அடையாளமாக மழமழப்பாயுள்ளது. இப்பகுதி இன்றளவும் தொல்லியல் துறையின் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

இந்நூலுடன் இணைப்பாகக் கொடுக்கப்படும் சிறு புத்தகம் பற்றி பாராட்டியே ஆகவேண்டும். புத்தகங்கள் தொடர்பான சிந்தனைகளைத் தொகுத்துத் தனியாக புத்தகமாகக் கொடுத்துள்ளது பாராட்டுதலுக்குரியதாகும். நூல்கள் குறித்து பல்வேறுபட்ட பரிமாணங்களில் எழுதப்பட்ட இந்நூலுக்கும், நூலாசிரியர் திரு. ஜெ. வீரநாதன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ச. மணிவண்ணன்**
***மணிபாரதி அச்சகம்***
*சிதம்பரம்*

# வாழ்த்துரை



சி. வரதராஜன்
எழுத்தாளர், கணினி வல்லுநர்
கோயம்புத்தூர்

புத்தகம் பற்றிய புத்தகம்
படிக்க வேண்டியது அவசியம்!
எத்தனை எத்தனை தகவல்கள்
அத்தனையும் அறிவுக் களஞ்சியம்!

கடல் போன்ற புத்தகஉலகின்
கவனத்தை ஈர்க்கும் இப்புத்தகம்
நூல் மட்டும் அல்ல
நூலினைப் பற்றிய நூல்நிலையம்!

இறவா தமிழுலகில் கற்காலமுதல்
கணினிக்காலம் வரை நூலினைப்பற்றி
வீரநாதனின் வித்தியாசமான முயற்சியால்
வீரநடை போடட்டும் தமிழ்!

மீசை வைத்த கூகிள்-இவர்
மீண்டும் மீண்டும் எழுதவேண்டும்
ஆசை கொண்ட நல்லிதயங்கள்
அனைவரும் ஆதரவு தரவேண்டும்!

அன்புடன்

16.11.12



# முன்னுரை



சுமார் 7 ஆண்டுகளாக மனதில் உருவாக்கி வைத்திருந்த செய்திகளை இன்று உங்கள் முன் புத்தகமாக வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பாக, எதிர்பாராதவிதமாக நமது செயல்பாடுகள், பணி, வாழ்க்கை என்று அனைத்தும் நேரடியாகப் புத்தகங்களுடன் இணைந்து செல்லுவதாக மாறின. இதே நிலையில் புத்தகம் தொடர்பான பல கேள்விகளை பல நண்பர்கள் நம்மிடம் கேட்டு வந்தனர். எடுத்துக் காட்டாக ஐஎஸ்பிஎண் பற்றி பல அச்சக நண்பர்களே வினவினார்கள். அவர்களுக்கு முழுமையான பதிலை இதுவரையிலும் கொடுத்து வந்தோம்.

புத்தகம் தொடர்பான தகவல்களைத் திரட்ட முற்பட்டபோது கிடைத்த பல அரிய தகவல்கள் பிரமிப்பை ஏற்படுத்தின. எவ்வளவு தகவல்கள்! உலக வரலாற்றின் ஒவ்வொரு பக்கத்திலும் புத்தகம் இடம் பெற்றிருப்பது உண்மையிலேயே வியப்பிற்குரிய ஒன்றாகும்.

புத்தகத்தின் வரலாறு என்று தேடத்துவங்கினால், அரசியல், மதம், வாழ்க்கை முறை, அச்சுத்துறை, பயணம் என்று ஏராளமான பகுதிகளுக்கான செய்திகள் தாமாகவே நமக்குக் கிடைக்கின்றன. புத்தகம், அச்சு, காகிதம், மை, அச்சு இயந்திரங்கள் என்று வரிசையாகச் செல்லும்போது நூலகங்கள் குறுக்கிடுகின்றன. அவற்றைத் தொடாமல் செல்லவே முடியாது. நூலகம் என்று பார்க்கப்போனால், அதில் ஒரு தமிழரின் உலகளவிலான போற்றப்பட வேண்டிய பங்களிப்பு என்பது பொதுமக்களுக்குச் சென்று சேரவேயில்லை என்பதை அறிய முடிகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரை சில தனி மனிதர்களின் சொத்தாக விளங்கும் நூலகங்கள் பிரமிக்கத் தக்க வளர்ச்சியடைந்துள்ள செய்திகள் தமிழர்களின் வாசிப்பு வளர்ச்சிக்கு ஒரு சாட்சியாகும்.

நூல்கள் என்று பார்க்கப்போனால், நூலாசிரியர்கள், பதிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், இவர்களைத் தொடர்ந்து விற்பனையாளர்கள், கடைசியாக வருவது வாசகர்கள் என்று அமைகிறது.

எழுதுதல், பதிப்பித்தல், அச்சிடுதல், வெளியிடுதல் என்பனவற்றில் உள்ள சிரமங்கள் வெளியே தெரிவதில்லை.

இத்தனைக்கும் அடிப்படையான எழுத்தாளன் என்பவரின் நிலை தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் இன்னும் மிக மோசமாக இருப்பது வேதனைக்குரியது. என்ன செய்வது, பாரதி தொடங்கி வளர்ந்து வருகின்ற இந்த வேதனையை நீக்க யாரும் முயற்சிப்பது இல்லை என்பதே உண்மையாகவும் உள்ளது.

புத்தகங்களை எழுதுதல், உருவாக்குதல், பதிப்பித்தல், பாதுகாத்தல் என்பன போன்றவை வழக்கமான செயல்களே. ஆனால் புத்தகங்களை எரித்தல் என்பது மிகவும் கொடூரமானதாகும். உலக வரலாற்றின் பக்கங்களைப் புரட்டினால் இந்த நிகழ்வு மிகப்பெரிய அளவில் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. ஒரு நாகரீகத்தின் அடிப்படையையே மாற்றியமைக்க இதுபோன்ற அநாகரீகமான செயல்கள் நடைபெற்றுள்ளன என்பதைப் படிக்கும்போது மனம் மிகுந்த வேதனையடைந்தது. அறிஞர்களால் சேமித்து வைக்கப்பட்டிருந்த எழுதப்பட்ட புத்தகங்கள், ஓலைச்சுவடிகள், பழைய அச்சிட்ட புத்தகங்கள் என்று பல நிலைகளில் இருந்த புத்தகங்கள் - குறிப்பாக அறிவை வளர்க்கும் ஏராளமான புத்தகங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த நூலகங்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டு முற்றிலுமாக எரியூட்டப்பட்டுள்ளன.

ஒரு மனிதனைக் கொன்றால் அதேபோன்ற அல்லது மாறுபட்ட மனிதன் பிறப்பான்; கிடைப்பான். ஆனால் கிடைத்தற்கரிய ஒரு காவியத்தை, இலக்கியத்தை, எழுதப்பட்ட படைப்பை கொளுத்தினால் மீண்டும் அதேபோன்ற படைப்பை உருவாக்குவது யாரால் இயலும்? அதுதானே மொழியின் வளர்ச்சியாக இருந்தது! நாகரீகத்தின் வெளிப்பாடாக இருந்தது! சிலப்பதிகாரமும், திருக்குறளும் கிடைக்காமலிருந்திருந்தால் தமிழின் வளமையும், தமிழனின் பெருமை உலகிற்குத் தெரிந்திருக்குமா?

உலகளவில் பல நாடுகளில், பல மொழிகளுக்கு இதுபோன்ற பேரிழப்பு ஏற்பட்டுள்ளதை வரலாற்றின் பக்கங்களில் பார்க்க முடிகிறது. தற்போது நமது இந்தப் புத்தகத்தில் இந்தக் கருப்பு நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளை சேர்க்கவில்லை. காரணம், முதலில் நல்லனபற்றி பேசலாம். பிறகு இயற்கை அனுமதித்தால் இவைபற்றி தனியாக ஒரு நூலே எழுதலாம் என்று எண்ணியுள்ளோம்.

புத்தகம் பற்றித் தேடும்போது வெளியே வந்தவை இவைபோன்ற ஏராளமானவை. உலக அளவில் புத்தகம் என்பது பற்றியே துவக்கினோம். ஆனால் அதற்கு இந்த ஒரு பிறவி போதாது என்பது நமது முடிவு. அதனால் தமிழ்நாட்டின் ஒரு சிறிய அளவை மட்டுமேத் தொட்டிருக்கின்றோம். ஆம்,

நம்முடைய இந்தப் படைப்பு, பல தொகுப்புகளாக உருவாக்கப்பட வேண்டிய, புத்தகம் என்பது பற்றிய கலைக்களஞ்சியம் ஒன்றின் ஒரு பக்கம் மட்டுமே என்பதை பணிவுடன் ஒப்புக் கொள்கிறோம்.

புத்தகம் தொடர்பாக நிறைய செய்திகள் நாளிதழ்களில் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. அவற்றைத் தொகுத்தாலே ஒரு புத்தகம் வெளியிடலாம். இந்தப் புத்தகத்தில், பல செய்தித்தாள்களில் வெளியான கவிதை, செய்திக் குறிப்புகள், கட்டுரைகள் போன்றவற்றை எடுத்துக் காட்டிற்காக வெளியிட்டுள்ளோம். அந்த இடங்களில் அந்தந்த நாளிதழ்களின் பெயரையும், வெளியான தேதியையும் கொடுத்துள்ளோம். அவர்களுக்கு நமது நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

மதிப்பிற்குரிய **கவிப்பேரருவி கவிஞர் ஈரோடு தமிழன்பன்** ஐயா அவர்களைத் தொலைபேசி வழியாகத்தான் தொடர்பு கொண்டோம். 'நேரில் வரவேண்டாம், புத்தகத்தை அனுப்புங்கள்' என்று சொன்னதுடன், இந்தப் புத்தகத்தைப் பார்த்து அருமையான கவிதையாகத் தமது வாழ்த்துக்களை வரைந்து கொடுத்துள்ளார். அவருடைய வாழ்த்துக் கவிதை மூலம் நமக்கு **"கணினிக் கம்பன்"** என்ற பட்டத்தையும் வழங்கி பெருமைப் படுத்தியுள்ளார்கள். எம்கடன் பணி செய்து கிடப்பதுவே என்று செயல்புரியும் நமக்கு ஐயா அவர்கள் இப்படி ஒரு மதிப்பை கொடுத்துள்ளார்கள் என்றால் நாம் செய்துவரும் செயல்களும், கடந்து செல்லும் பாதையும் சரியாகவே உள்ளது என்பதை உணர முடிகிறது. அத்துடன் நமது செயல்பாடுகள் இன்னும் மேம்பட வேண்டும் என்ற ஒரு வித அச்சத்தையும் மனதிற்குள் கொடுக்கின்றது. என்றென்றும் எங்கள் நலம் நாடும் அந்தப் பெருந்தைகயாருக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவரது திருக்கரங்களால் வெளியிட்டுக் கொடுத்த எங்களது **இணையத்தை அறிவோம்** என்ற புத்தகம் 2011ஆம் ஆண்டில் இரண்டு பரிசுகளைப்[1] பெற்றுள்ளது என்பதை இந்த இடத்தில் குறிப்பிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

பல்வேறு கடுமையான பணிகளுக்கு இடையேயும் நமது வேண்டுகோளை ஏற்று இந்தப் புத்தகத்திற்கு வாழ்த்துரை வழங்கிய ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் **திரு. ஸ்டாலின் குணசேகரன்** அவர்களுக்கு எங்கள் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

1 சென்னை **பவித்ரம் அறக்கட்டளை** வழங்கிய 2011ஆம் ஆண்டிற்கான **சிறந்த அறிவியல் நூல் பரிசு; நாமக்கல் கு. சின்னப்ப பாரதி அறக்கட்டளையினர்** வழங்கியுள்ள 2011ஆம் ஆண்டிற்கான **சிறந்த அறிவியல் நூல் பரிசு மற்றும் சான்றிதழ்.**

எங்களது எழுத்துப் பணியில் தொய்வு ஏற்படாமல் ஊக்குவித்து வருபவரும், எங்களது வளர்ச்சியையும் நலத்தையும் விரும்பும் எங்கள் மதிப்பிற்குரிய, தமிழ்நாடு மாஸ்டர் பிரிண்டர்ஸ் ஃபெடரேஷன் மற்றும் கோயம்புத்தூர் மாஸ்டர் பிரிண்டர்ஸ் அசோஸியேஷன் ஆகியவற்றின் தலைவரும், ஆல் இந்திய ஃபெடரேஷன் ஆஃப் மாஸ்டர் பிரிண்டர்ஸ், புதுதில்லியின் துணைத் தலைவருமான **திரு. சி.டி. குமாரவேல்** அவர்களுக்கு எங்கள் நன்றிகள் என்றும் உரித்தாகுக.

நமது அன்பான வேண்டுகோளை ஏற்று இந்தப் புத்தகத் திற்கு மதிப்புரை நல்கிய நமது நண்பர், **சிதம்பரம் திரு. ச. மணிவண்ணன்** அவர்கட்கும் நமது இதயப்பூர்வமான நன்றிகள்! நமது புத்தகங்களுக்கு என்றென்றும் முதல் வாசகர் என்ற முறையில் இதற்கு நமது வாழ்த்துரையை வழங்கிய திரு. சி. **வரதராஜன்** அவர்கட்கும் நமது நன்றிகள்.

இப்படி ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கின்றோம் என்று சொன்னபோது அதனை மனமுவந்து பாராட்டியதுடன் தங்களது செயல்களால் எங்களை ஊக்கப்படுத்தியவர்கள் பலர். குறிப்பாக சிலர்; **வர்த்தமானன் பதிப்பக** உரிமையாளர் **திரு. ஸ்ரீ வர்த்தமானன்** அவர்கள் உடனடியாக ஒரு அருமையான புத்தகத்தை நமக்குக் கொடுத்து பயன்படுத்தச் சொன்னார்கள். **த ஹிந்து ஸ்பீக்ஸ் ஆன் லைப்ரரிஸ்** *(The Hindu Speaks on Libraries)* என்ற அந்த நூலில் இந்தியாவில் நூலகங்கள் தொடர்பாக பல அருமையான தகவல்கள் கிடைத்தன. அவருக்கு எங்கள் நன்றிகள் என்றும் உரித்தாகுக. இந்தப் புத்தகத்தைப் பார்த்து சில திருத்தங்களைக் குறிப்பிட்டுச் சொல்லியும், வாழ்த்தியும் எங்களை மகிழச் செய்த **சந்தியா பதிப்பகம்** திரு. **சௌந்தரராஜன்** அவர்கட்கு எங்கள் இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தப் புத்தகம் தொடர்பாக நமக்கு ஏற்பட்ட சில ஐயப்பாடுகளைக் களைந்ததுடன் மேலும் சில உதவிகளையும் செய்து கொடுத்த அருமை நண்பர் திரு. **விருபா து. குமரேசன்** அவர்கட்கு எங்கள் அன்பு கலந்த நன்றிகள் என்றும் உரித்தாகுக.

இந்தப் புத்தகம் எழுதத் துவங்கியபோதிலிருந்து நமக்குப் பலவகைகளில் உறுதுணையாக இருந்த எங்கள் பயிற்சிப்பள்ளி ஆசிரியை **செல்வி கோ. ரேணுகாதேவி**க்கு எங்கள் நன்றிகள்!

இந்தப் புத்தகம் பற்றிச் சொல்லியபோதும், பிரதிகளைக் காட்டியபோது மனம் மகிழ்ந்து நமக்கு வாழ்த்து சொல்லிய எங்கள் பெற்றோர், சகோதர, சகோதரியர், உறவினர்கள், எமது மனைவி

***திருமதி வீ. சித்ரா***, எங்கள் புதல்வன் செல்வன் **வீ. வீரபாலாஜி** ஆகியோருக்கும் எங்கள் நன்றிகள்.

இந்தப் புத்தகம் எழுத உதவிய பல்வேறு புத்தகங்களை வெளியிட்டுள்ள (ஆங்காங்கே அந்தப் பதிப்பாளர்களின் பெயர்களையும் வெளியிட்டுள்ளோம்) பெருமை மிகு பதிப்பாளர்களுக்கு நமது நெஞ்சார்ந்த நன்றிகள். குறிப்பாக தமிழ் பதிப்புத்துறை, பதிப்புகள் தொடர்பாக பல நல்ல புத்தகங்களை வெளியிட்டு வரும் சென்னை **பாரதி புத்தகாலயம்** நிறுவனத்தினருக்கு நமது நன்றிகளை இப்புத்தகம் வாயிலாக தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பிழைகள் இருந்தால் அதற்கு நாமே பொறுப்பு; சுட்டிக் காட்டுங்கள்; அடுத்த பதிப்பில் (!) கண்டிப்பாகத் திருத்திக் கொள்கிறோம்.

எங்களது எழுத்துக்களுக்கு தகுந்த மதிப்பளித்து, நல்ல பரிசுகளை வழங்குவதன் மூலம் எங்களை ஊக்கப்படுத்தி வருகின்ற தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை, தனியார் அறக்கட்டளையினர் உள்ளிட்ட அனைவருக்கும் எங்கள் பணிவான நன்றிகலந்த வணக்கங்கள்.

நமது புத்தகங்களுக்கு என்றும் நல்லாதரவு தரும் மதிப்புமிக்க வாசக அன்பர்களுக்கும், பல்வேறு வழிகளில் மிகப் பெரிய அளவில் ஆதரவு தருகின்ற பத்திரிகை நண்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்!

உங்கள் கருத்துக்களை எதிர்பாக்கின்றோம்.

*12.12.2012* **ஜெ. வீரநாதன்**

கோயம்புத்தூர் veeranathan@yahoo.com



நமது **இணையத்தை அறிவோம்** என்ற புத்தகத்தை **கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன்** அவர்கள் வெளியிட **பேராசிரியர் முனைவர் பொன்னவைக்கோ** அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

# பொருளடக்கம்

## பாகம் - 1


01. **ஏப்ரல் 23, உலகப் புத்தக தினம் ....................................................1**
ஏன், எதற்கு - ஏப்ரல், 23? .................................................... 1
இந்தியாவில் புத்தக தினம் . . . ?.................................................... 3
02. **புத்தகம் என்றால் என்ன? ....................................................5**
03. **புத்தகத்தின் வரலாறு....................................................7**
துவக்ககாலப் புத்தகம்.................................................... 9
காகிதம்.................................................... 11
அச்சு மை .................................................... 13
அச்சின் துவக்கம் .................................................... 13
அச்சு இயந்திரங்கள் .................................................... 15
பிரித்தெடுக்கும் அச்சு முறை .................................................... 16
இந்தியாவில் புத்தகங்கள் அச்சிடுதல் .................................................... 17
04. **என்றும் வாழும் புத்தகங்கள் ....................................................21**
1. வேத நூல்கள்.................................................... 21
2. தத்துவ நூல்கள் .................................................... 22
3. வாழ்க்கை சரித்திரங்கள் .................................................... 23
4. அறிவியல் நூல்கள்.................................................... 24
5. பயண நூல்கள்.................................................... 26
6. இலக்கிய நூல்கள் .................................................... 27
7. இலக்கண நூல்கள்.................................................... 28
8. அகராதிகள்.................................................... 28
9. கலைக்களஞ்சியங்கள்.................................................... 29
10. புரட்சி நூல்கள்.................................................... 30
11. உலகை மாற்றிய புத்தகங்கள் .................................................... 32
05. **புத்தகங்களின் வகைகள்....................................................34**
06. **புத்தகத்தின் அமைப்பு ....................................................37**
07. **நூலகங்கள்....................................................46**
நூலக வரலாறு.................................................... 49
நூலகங்களின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள்................ 50
நூலகத்துறைக்குப் புத்தகங்கள் வாங்குதல்......................... 54
நூல்கள் பதிவு விதிமுறைகள் .................................................... 54
மிகப் பெரிய நூலகங்கள் .................................................... 58
இந்தியாவின் பெரிய நூலகங்கள் .................................................... 58
அண்ணா நூற்றாண்டு நூலகம்.................................................... 59

சிறப்பு மிக்க நூல் நிலையங்கள் ........ 60
1. டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம் ........ 60
2. சென்னை இலக்கியச் சங்க நூலகம் ........ 63
3. பெனிங்டன் பொது நூலகம், ஸ்ரீவில்லிப்புத்தூர் ........ 63
4. அடையாறு நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம் ........ 63
5. கன்னிமாரா பொது நூலகம் ........ 64
6. சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர் ........ 64
7. திரு. கே.ஆர். சுந்தரம் ஐயர் நினைவு நூலகம் ........ 65
8. குப்புசாமி சாஸ்த்ரி ஆராய்ச்சி நிறுவன நூலகம் ........ 65
9. சாந்தி சாதனா அறக்கட்டளை நூலகம் ........ 65
10. மறைமலை அடிகள் நூலகம் ........ 65
11. ஞானாலயா ஆய்வு நூலகம், புதுக்கோட்டை ........ 66
12. பெரியார் பகுத்தறிவு நூலகம் மற்றும் ஆய்வு மையம் .. 66
13. கார்ல் மார்க்ஸ் நூலகம் ........ 66
14. ஆசியாவியல் நிறுவன நூலகம் ........ 67
15. பேராசிரியர் ஆராய்ச்சி நூலகம் ........ 67
16. ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் ........ 67
17. ராமகிருஷ்ண ஆஸ்ரம நூலகம் ........ 68
18. தமிழ் நூல் காப்பகம், விருத்தாச்சலம் ........ 68
நூலகச் சிறப்பு ........ 69
08. **எழுதுதலும் எழுத்தாளர்களும் ........ 70**
தற்காலத்திய எழுத்தாளர்கள் ........ 72
தமிழ்நாட்டில் எழுத்தாளர்களின் நிலை ........ 74
எழுத்தாளராக விரும்புவோர் கவனத்திற்கு ........ 77
அடிப்படைத் தகுதிகள் ........ 78
எழுத்தாளர்களின் இன்றைய நிலை...? ........ 81
இலக்கியம் அல்லாத பிற நூல்கள், நூலாசிரியர்கள் ........ 83
குறைந்துபோன குழந்தை எழுத்தாளர்கள், இதழ்கள் ........ 86
09. **புத்தகப் பதிப்பும் பதிப்பாளர்களும் ........ 87**
மேலை நாடுகளில் பதிப்பிக்கும் வழிமுறை ........ 88
பதிப்பு ஒப்பந்தமும் காப்புரிமையும் ........ 89
தமிழ்ப் புத்தகப் பதிப்பின் வரலாறு ........ 90
பதிப்பாளரின் கடமை ........ 93
10. **பதிப்பாளர்களின் இடர்பாடுகள் ........ 95**
தமிழ் பதிப்புலகின் முன்னோடிகள் ........ 97
11. **வாசகர் ........ 98**
12. **புத்தகம் வாங்கும்போது... ........ 102**
மதிப்புரைகள் ........ 103
வேறு வகைகள் ........ 103
புத்தகத் திருவிழாக்களில் தேடுவது ........ 103

தேடவரும்போது தேவையானது ........ 104
அடுத்து மனதில் கொள்ள வேண்டியவை ........ 105
நேரடியாக புத்தகங்களை வாங்கும்போது ........ 106
13. **புத்தகம் உருவாக்குதல் ........ 108**
புத்தகத்தின் அளவு ........ 120
14. **புத்தகம் எப்படி வெளியிடப்படுகிறது? ........ 122**
ஆசிரியர் எழுதியவை ........ 123
1. முதல் மற்றும் வழக்கமான வழிமுறை
அ. பதிப்பாளரை அணுகுதல் ........ 123
ஆ. படைப்பாளருடன் ஒப்பந்தம் ........ 124
இ. புத்தக வடிவமைப்பு ........ 126
ஈ. அச்சிட்டு புத்தகமாக்குதல் ........ 127
உ. விநியோகமும் விற்பனையும் ........ 127
ஊ. மறு அச்சும் மறு பதிப்பும் ........ 128
2. இரண்டாவது வழி முறை ........ 129
மனதில் கொள்ள வேண்டியவை ........ 130
புத்தகங்களுக்கு விலை நிர்ணயித்தல் ........ 132
15. **புத்தகம் வெளியிட்டவுடன் செய்ய வேண்டியவை ........ 134**
1. நூலகங்களுக்கு அனுப்புதல் ........ 134
2. மதிப்புரை வேண்டி அனுப்புதல் ........ 135
3. கல்வி நிலையங்களுக்கு கடிதம் எழுதுதல் ........ 135
4. விற்பனையாளர்களுக்குத் தகவல் கொடுத்தல் ........ 135
5. விளம்பரங்கள் கொடுத்தல் ........ 136
16. **மின்னூல் ........ 137**
பீடிஎஃப் வகை ........ 138
ஈ-பப் வகை மின்புத்தகம் ........ 139
மின்னூல் படிப்பான் (ஈ-புக் ரீடர்) ........ 140
மின்னூல் விற்பனையகங்கள் ........ 141
தமிழில் கணினி வரைகலைக்கான மின்னிதழ் ........ 142
17. **மின்னூல் VS. அச்சிட்ட புத்தகங்கள் ........ 143**
**வாசிப்பு! ........ 147**
18. அச்சிட்ட நூல்களின் தேவையும், பயன்பாடும் ........ 148
மண்ணிற்குள் சென்றவற்றிற்கும் மறு பிறப்பு ........ 150
என்றும் வாழுபவை ........ 151
19. **புத்தகங்கள் பற்றிய இதழ்கள் ........ 153**
**இதழ்ப் பெண் ........ 156**
20. **புத்தக மதிப்புரைகள் ........ 157**
நாளிதழ்களில் மதிப்புரைகள் ........ 158
பருவ இதழ்களில் புத்தக மதிப்புரைகள் ........ 160

21. **சிறந்த நூல்கள்** ........ 166
1. உலக அளவில் சிறந்த நூல்கள் ........ 168
2. தமிழ் மொழியில் சிறந்த நூல்கள் ........ 170
சிறந்த நூல்கள் - நண்பர்களின் தெரிவு ........ 173
22. **நூல்களை அரசுடமையாக்குதல்** ........ 177
அரசுடமையாக்கப்பட்ட முதல் புத்தகம் ........ 179
அரசுடமையாக்கப்பட்ட நூல்கள் - வேண்டுகோள்! ........ 179
23. **புத்தக விற்பனையாளர்கள்** ........ 182
இணையத்தில் புத்தகக் கடைகள் ........ 183
24. **பழைய புத்தகக் கடைகள்** ........ 186
25. **புத்தகத் திருவிழாக்கள்** ........ 188
உலக அளவில் நடைபெறும் புத்தக் கண்காட்சி ........ 189
புதுதில்லியில் புத்தகத் திருவிழா ........ 189
தமிழ்நாட்டில் பிரபலமான புத்தகத் திருவிழாக்கள் ........ 191
1. சென்னைப் புத்தகத் திருவிழா ........ 191
2. ஈரோடு புத்தகத் திருவிழா ........ 192
3. மதுரைப் புத்தகத் திருவிழா ........ 193
4. திருப்பூர் புத்தகத் திருவிழா ........ 194
5. நெய்வேலி புத்தக் கண்காட்சி ........ 194
6. சேலம் தெய்வீகம் புத்தகத் திருவிழா ........ 195
7. புதுச்சேரி புத்தகத் திருவிழா ........ 195
ஆண்டு தோறும் நடைபெறும் பிற கண்காட்சிகள் ........ 196
அரசின் ஆதரவு தேவை ........ 197
26. **புத்தகங்களுக்கான பரிசுகளும் விருதுகளும்** ........ 198
உலக அளவிலான விருதுகள் ........ 199
தமிழக மற்றும் இந்திய அரசு வழங்கும் விருதுகள் ........ 201
நடுவண் அரசு வழங்கும் சாகித்ய அகாதமி விருது ........ 209
ஞானபீட விருது ........ 210
தாகூர் இலக்கிய விருது ........ 211
27. **புத்தகப் புழு!** ........ 212
28. **புத்தக(ப் பக்க)க் குறி (புக் மார்க்)** ........ 214
29. **புத்தகம் பற்றிய செய்திகள் மற்றும் புகைப் படங்கள்** ........ 216
சிறிய புத்தகங்கள் - நம்மிடம் உள்ளவை ........ 218
30. **மாறுபட்ட வடிவமைப்பில் புத்தகங்கள்** ........ 220


## பாகம் - 2


31. **சர்வதேச நிலையான புத்தக வரிசை எண் (ISBN)** ........ 227
ஐஎஸ்பிஎண் - துவக்கம் ........ 228
ஐஎஸ்பிஎண் - அறிமுகம் ........ 229
எதற்காக ஐஎஸ்பிஎண் ........ 230
எவற்றிற்கெல்லாம் ஐஎஸ்பிஎண் கொடுப்பது ........ 231

யாரெல்லாம் ஐஎஸ்பிஎண் வாங்க வேண்டும் .................... 232
ஐஎஸ்பிஎண் - கவனிக்க வேண்டியவை........................... 232
மின் படைப்புகளுக்கும் ஐஎஸ்பிஎண் ................................ 236
ஐஎஸ்பிஎண் - அமைப்பு முறை ........................................ 237
ஐஎஸ்பிஎண்-ஐ அச்சிடுதல்.................................................. 239
ஐஎஸ்பிஎண்-னின் பயன்பாடுகள் ...................................... 240
ஐஎஸ்பிஎண் விவரப் புத்தகம் .......................................... 241
ஐஎஸ்பிஎண் வழங்குகின்ற இந்திய முகவர்........................ 244
ஐஎஸ்பிஎண் எப்படிப் பெறுவது? ....................................... 245
தொடரும் செயல்கள்........................................................... 247
32. **காப்புரிமை ..............................................................** 249
காப்புரிமை - அடிப்படை செய்திகள் ................................ 251
காப்புரிமைய சட்டம், 1957 ................................................ 252
படைப்பு, படைப்பாளர் ........................................................ 252
காப்புரிமை......................................................................... 254
படைப்புகளைக் கையாளுதல்............................................. 256
காப்புரிமையை பதிவு செய்வது ........................................ 257
காப்புரிமைக்கான காலம் .................................................... 258
காப்புரிமை சட்டத்திற்கு எதிரானவை ................................ 260
காப்புரிமையின் நோக்கம்.................................................... 262
காப்புரிமை சட்டத்தில் சமீபத்திய மாற்றம்......................... 263
33. **புத்தகப் பதிப்பு பற்றிய சட்டங்கள்..................................** 264
34. **புத்தகங்கள் தொடர்பான சாதனைகள் .............................** 268
இந்திய அளவில் செய்யப்பட்டுள்ள சாதனைகள்............. 268
உலக அளவில் புத்தகம் சார்ந்த சாதனைகள்..................... 271
35. **வீட்டிற்கோர் புத்தகச்சாலை - அறிஞர் அண்ணா.............** 277
விருபா.காம் ........................................................................ 286
36. **பின்னிணைப்புகள்.........................................................** 287
சாகித்ய அகாதமி விருது பெற்றுள்ள தமிழ் எழுத்தாளர்கள் ....... 293
ஞான பீட விருது பெற்றோர் (இந்திய அளவில்).............. 296
**தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்.......** 298
**முதற் பதிப்பின் முக்கியத்துவம் .......................................** 302
**தமிழ் புத்தகங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் தேவை! ....** 306
எழுத்தாளர் - பதிப்பாளர் மாதிரி ஒப்பந்தம் ..................... 307
புத்தகம் வெளியிட உதவிகள்............................................ 315
**இந்தப் புத்தகம் எழுத உதவிய புத்தகங்கள் .....................** 316
உதவிய வலைதளங்கள் ..................................................... 319
38. **சொல் நிரல் (Index)......................................................** 320
குறிப்புகள்.......................................................................... 322